# வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர்

# மெட்ரோ ரயில் பாதையில் பாதுகாப்பு கமிஷனர் சோதனை

சென்னை, பிப். 6–

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே மெட்ரோ பாதையில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் நேற்று டிராலி இயக்கி, சோதனை நடத்தினார். நாளை விரைவு ரயில் இயக்கி . சோதன்ன நடத்துகிறார்.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோநகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த மெட்ரோ ரயில் பாதையில், தென் பிராந்திய ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் அபாய்குமார், நேற்று டிராலியில் சென்று சோதனை நடத்தினார்.

பாதையின் நிலை, அதிர்வு, மின் சாதனங்கள், சிக்னல் அமைப்புகள் போன்றவை முறையாக நிறுவப்பட்டு இயங்குகின்றனவா என, இரவு வரை சோதனை நடந்தது.




வண்ணாரப்பேட்டை – தியாகராயர் கல்லூரி இடையே மெட்ரோ சுரங்கப்பாதையில், அதிகாரிகள் நேற்று, 'டிராலி'யில் சென்று, சோதனை நடத்தினர்.

சோதனையில், தென் பிராந்திய ரயில்வே பாதுகாப்பு துணை கமிஷனர் சீனிவாசன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பிரதீப்யாதவ், சிக்னல் தொழில் நுட்ப பிரிவு ஆலோசகர் மனோகரன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இன்று இக்குழுவினர், இப்பாதையில் உள்ள தியாகராயர் கல்லூரி, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, சுங்கசாவடி, தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோநகர் நிலையங்களில் ஆய்வு நடத்த உள்ளனர்.

இங்குள்ள உட்கட்டமைப்பு வசதிகள், சாதனங்களின் செயல்பாடு, மற்றும், பாதுகாப்பு வசதிகள், இணைப்பு சாலை வசதிகள் குறித்தும் ஆய்வு நடக்கிறது. பின், கோயம்பேடில் உள்ள மெட்ரோ தலைமையக கட்டுபாட்டு நிலையத்துடன், இப்பாதையின் இணைப்பு சாதனங்களை இயக்கி ஆய்வு செய்கின்றனர்.

நாளை காலை, வண்ணாரப்பேட்டை – விம்கோநகர் இடையே, 80 கி.மீ., வேகத்தில் ரயில் இயக்கி, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் சோதனை நடத்துகிறார்.

இப்பாதையில், பயணியர் ரயில் இயக்க, பாதுகாப்பு கமிஷனர், ஒரு வாரத்திற்குள் அனுமதி கொடுப்பார் என, எதிர்பார்க்கப்படுகிறது. வரும், 14ம் தேதி, இப்பாதையில் ரயில் போக்குவரத்து துவங்க ஏற்பாடு நடந்து வருகிறது.